# அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை – 600 006
## மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு மார்ச் /ஏப்ரல் –2023
## வரலாறு விடைக்குறிப்புகள்

குறிப்பு

1. கருப்பு அல்லது நீலம் மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டும் மதிப்பீடு செய்தல்
2. பகுதி–1 ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்துக் **குறியீட்டுடன்** விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மொத்த மதிப்பெண்கள் 90

| பகுதி – I | | | | | |
|---|---|---|---|---|---|
| அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 20×1=20 | | | | | |
| வகை - A | | | வகை – B | | |
| வினா எண் | குறிப்பு | விடை | வினா எண் | குறிப்பு | விடை |
| 1 | ஈ | 1925 | 1 | ஈ | லின்லித்கோ பிரபு |
| 2 | ஈ | மதன்மோகன் மாளவியா | 2 | இ | நார்வே |
| 3 | ஆ | அன்னிபெசன்ட் | 3 | ஈ | 7மாகாணங்களில் |
| 4 | ஆ | கூற்று மற்றும் காரணம் சரி காரணம் கூற்றை விளக்குகிறது | 4 | ஈ | ஜவஹர்லால் நேரு |
| 5 | இ | லாலா லஜபதிராய் | 5 | ஈ | ஆட்டோவான் பிஸ்மார்க் |
| 6 | அ | A.O.ஹியூம் | 6 | ஈ | 1789–1795 |
| 7 | ஈ | லின்லித்கோ பிரபு | 7 | ஆ | கூற்று மற்றும் காரணம் சரி காரணம் கூற்றை விளக்குகிறது |
| 8 | ஆ | (i)மற்றும்(ii) | 8 | ஈ | மதன்மோகன் மாளவியா |
| 9 | இ | நார்வே | 9 | அ | A.O.ஹியூம் |
| 10 | ஆ | சுயராஜ்ய கட்சி | 10 | இ | லாலா லஜபதிராய் |
| 11 | ஆ | மறுமலர்ச்சி | 11 | ஈ | 1925 |
| 12 | ஆ | (ii) (i) (iii) | 12 | ஆ | மறுமலர்ச்சி |
| 13 | இ | சீன– ஜப்பானிய போர் | 13 | ஆ | செங்கோட்டை, புதுடெல்லி |
| 14 | அ | 100 | 14 | ஆ | 1915 |
| 15 | ஆ | 1915 | 15 | ஆ | சுயராஜ்ய கட்சி |
| 16 | ஈ | ஆட்டோவான் பிஸ்மார்க் | 16 | ஆ | (ii) (i) (iii) |
| 17 | ஈ | ஜவஹர்லால் நேரு | 17 | இ | சீன– ஜப்பானிய போர் |
| 18 | ஆ | செங்கோட்டை, புதுடெல்லி | 18 | ஆ | (i)மற்றும்(ii) |
| 19 | ஈ | 7மாகாணங்களில் | 19 | அ | 100 |
| 20 | ஈ | 1789–1795 | 20 | ஆ | அன்னிபெசன்ட் |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| பகுதி – II | | |
|---|---|---|
| குறிப்பு : ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும்.<br>வினா எண்.30க்கு கட்டாயம் விடையளிக்கவும் 7×2=14 | | |
| 21 | **தொடக்க கால முக்கிய தேசியவாதிகள் :**<br>• தாதாபாய் நௌரோஜி<br>• சுரேந்திர நாத் பானர்ஜி<br>• W.C. பானர்ஜி<br>• பாலகங்காதரதிலகர்<br>• லாலா லஜபதி ராய்<br>• பிபின் சந்திரபால்<br>• கோகலே<br>• பக்ருதின் தியாப்ஜி<br>• பெரோஸ்ஷா மேத்தா **( ஏதேனும் நான்கு பெயர்கள்)** | 2 |
| 22 | **மகாதேவ் கோவிந்த ரானடேயின் சுதேசிக் கொள்கை :**<br>• சுதேசி என்பதன் பொருள் ஒருவருடைய சொந்த நாடு என்பதாகும்<br>• சொந்த நாட்டின் உற்பத்திப் பொருள்களுக்கு முன்னுரிமை<br>• ஒருவரது சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் பயன்பாடு குறைவான மனநிறைவைக் கொடுத்த போதிலும் முன்னுரிமை வழங்க வேண்டும் | 2 |
| 23 | **பகிஷ்கிரித் ஹிதகர்னி சபா :**<br>• Dr.அம்பேத்கார் – பகிஷ்கிரித் ஹிதகர்னி சபாவை நிறுவினார்.<br>• தனித்து விடப்பட்டவர்களின் நலனுக்கான அமைப்பு என்று அழைக்கப்பட்ட்து<br>• தீண்டத்தகாதவர்கள் மீது விதிக்கப்பட்ட இடர்பாடுகளைக் களைய பாடுபட்டது.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 24 | **இரண்டாவது லாகூர் சதி :**<br>• பிரிட்டிஷ் காவல்துறை அதிகாரி சாண்டர்ஸ் கொலை வழக்கே இரண்டாவது லாகூர் சதி வழக்கு<br>• இவ்வழக்கில் ராஜகுரு, சுகதேவ், பகத்சிங் உட்பட மேலும் 21 பேர் கைது செய்யப்பட்டனர் .<br>• 1930 அக்டோபர் 7ஆம் தேதி மூவருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டது.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 25 | **ஆகஸ்ட் கொடை:**<br>• 1940 ஆகஸ்ட் 8ல் லின்லித்தோ பிரபு அறிவித்தார்.<br>• வரையறுக்கப்படாத ஒருதேதியில் டொமினியன் அந்தஸ்து வழங்குதல்.<br>• அரச பிரிதிநிதி குழுவில் இந்தியர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் .<br>• இந்திய உறுப்பினர்களைக் கொண்ட போர் ஆலோசனைக்குழுவை உருவாக்குதல் .<br>• சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரித்தல்<br>• தங்களுக்கென அரசியல் சாசனத்தை இயற்ற இந்தியர்களுக்கு வாய்ப்பளித்தல் . **(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 26 | **ஜே வி பி குழு பரிந்துரைகளின் முக்கியத்துவம் :**<br>• மொழிவாரி மாகாணங்கள் குறுகிய பிராந்தியவாதத்தை வலியுறுத்துகிறது.<br>• தனது அறிக்கையில் மொழிவாரி மாநில சீரமைப்புக்கு உகந்த நேரமல்ல என அறிவித்தது.<br>• மொழிவாரி மாகாணங்கள் நாட்டிற்கு அச்சுறுத்தலாக அமையும்<br>• மொழியானது பிணைக்கும் ஆற்றல் மட்டுமல்ல பிரிக்கும் ஆற்றலும் உடையது.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 27 | **நாடு விடுதலை அடைந்தபோது இந்திய பொருளாதாரத்தின் நிலைகள் :**<br>• பொருளாதாரம் வலுவற்றதாக இருந்தது<br>• வறுமையின் அளவு அதிகமாக இருந்தது.<br>• கைவினைத் தொழில்கள் பாதிப்புக்குள்ளாக்கியது.<br>• திறமை மிக்க கைவினைஞர்கள் பலர் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்தனர்.<br>• தலா வருமானம் மிகவும் குறைவாக இருந்தது.<br>• 80% மக்கள் வேளாண்மையைச் சார்ந்து இருந்தனர் .<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 28 | **இத்தாலியை ,"வெறும் பூகோள வெளிப்பாடே" என்பதற்கு மெட்டர்னிக் விளக்கம் :**<br>• வியன்னா காங்கிரசால் இத்தாலி எட்டு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது.<br>• வடக்குப் பகுதி ஜெர்மன் மொழி பேசும் ஆஸ்திரியர்களின் வசம் ஒப்படைக்கப்பட்டது.<br>• பத்தொன்பதாம் நூற்றாண்டில் இத்தாலி 12 பெருமாநிலங்களையும் பல குறுநிலங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது.<br>• எனவே இத்தாலி " **வெறும் பூகோள வெளிப்பாடே"** என்று மெட்டர்னிக் குறிப்பிட்டார்.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |
| 29 | **ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் :**<br>• டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்தில் நடந்த முக்கியக் கடற்போர்.<br>• கடற்போரான இது ஒரு முடிவு பெறாத போராக இருந்தது.<br>• முதல் உலகப்போரின் மிகப்பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது. | 2 |
| 30 | **ஹிட்லர் :**<br>• நாசிசக்கட்சி தலைவர் . அவர் மெய்ன் கேம்ப் (எனது போராட்டம்) என்ற சுயசரிதையை எழுதினார்.<br>• இரண்டாம் உலகப்போருக்கு காரணமானவர்களில் ஒருவர்.<br>• ஜெர்மனியில் அவரது அரசு மூன்றாவது ரெய்ச் எனப்படும்.<br>**(ஏதேனும் இரண்டு குறிப்புகள்)** | 2 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| பகுதி – III | | |
|---|---|---|
| குறிப்பு : பின்வரும் வினாக்களில் எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும் . வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும் 7×3=21 | | |
| 31 | **பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கு :**<br>• தன்னாட்சி , மக்களாட்சி , குடிமை உரிமைகள் , தொழில் மயமாக்குதல் போன்ற நவீன சிந்தனைகளைப் பரப்பின.<br>• அரசியலை விமர்சனம் செய்தன. நாட்டை பாதிக்கும் பிரச்சனைகளைப் பேசியது.<br>• தேசிய, பிராந்திய மொழிப் பத்திரிக்கைகள் மக்களிடம் தேசிய உணர்வினை விதைத்தன.<br>• மக்கள் நலன் சார்ந்த பொதுவான செயல்களை மக்களுக்கு கற்றுத்தர முயன்றன .<br>• அமிர்த பஜார் பத்திரிக்கா ,தி பாம்பே கிரானிக்கல் , தி ட்ரிப்யூன், இந்தியன் மிரர், தி இந்து, சுதேச மித்தரன் ஆகியன முக்கியமான பத்திரிக்கைகளாகும்.<br>**(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 32 | **தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்கள் :**<br>• பிரிட்டிஷ் ஆட்சியில் இந்தியாவில் தன்னாட்சியை ஏற்படுத்துவது.<br>• தாய்நாடு பற்றிய பெருமையுணர்வை மக்களுக்கு ஏற்படுத்துவது.<br>• திலகர், அன்னிபெசன்ட் தலைமையில் இரண்டு தன்னாட்சி இயக்கங்கள் 1916ல் ஆரம்பிக்கப்பட்டன. | 3 |
| 33 | **ஜாலியன் வாலாபாக் படுகொலை :**<br>• சத்தியபால், சாய்புதீன் கிச்லு ஆகியோரைக் கைது செய்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜாலியன் வாலாபாக் மைதானத்தில் மக்கள் கூடியிருந்தனர்.<br>• இம்மைதானத்தில் ஒரே ஒரு குறுகிய வாயில் மட்டுமே இருந்தது.<br>• அங்கு சிக்கிக் கொண்ட மக்களைக் குறிவைத்து எந்திரத் துப்பாக்கிகளில் குண்டுகள் தீரும் வரை சுடுமாறு ஜெனரல் டையர் உத்தரவிட்டார்.<br>• அரசு தகவல்களின்படி உயிரிழப்புகள் 379 என்ற எண்ணிக்கையில் இருந்தது.<br>• இரவிந்திரநாத் தாகூர் நைட்வுட் பட்டத்தை துறந்தார். | 3 |
| 34 | **சர் ஸ்டாஃபோர்டு கிரிப்ஸ் அவர்களின் முன்மொழிவுகள் :**<br>• டொமினியன் அந்தஸ்து வழங்குதல்<br>• இரண்டாம் உலகப் போருக்குப் பின் அரசியல் சாசன வரைவுக் குழுவை உருவாக்குதல்<br>• இவ்வரைவுக் குழுவில் மாகாண சபைகளில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், சுதேச அரசர்களின் பகுதியில் இருந்து நியமனம் செய்யப்பட்டவர்களையும் கொண்டிருக்கும்.<br>• அதில் பாகிஸ்தான் பற்றியும் குறிப்பிடப்பட்டிருந்தது.<br>• புதிய அரசியல் சாசனத்தை ஏற்காத மாகாணம் பிரிட்டிஷ் அரசுடன் புதிய ஒப்பந்தம் ஏற்படுத்த உரிமை உள்ளது. **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 35 | **இந்திய அரசியலமைப்பின் தனித்தன்மைகள் :**<br>• குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளை உறுதி செய்யும் ஓர் ஆவணமாக உள்ளது.<br>• அரசு கொள்கைகளுக்கான வழிக்காட்டு நெறிமுறைகளை உள்ளடக்கியது.<br>• சுதந்திரமான தேர்தல் ஆணையம் ,வயதுவந்தோர்க்கு வாக்குரிமை உறுதி செய்தது.<br>• மக்கள் பிரிதிநிதிகளுக்கு சட்டம் இயற்றுவதில் இறையாண்மையை உறுதி செய்தது<br>• இந்திய அரசமைப்பு நீதித்துறையின் சுதந்திரத்தன்மையும் உறுதி செய்தது. **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 36 | **இந்தியாவில் பசுமைப் புரட்சியின் விளைவுகள்:**<br>**நேர்மறை விளைவுகள் :**<br>• இந்தியா உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற்றது.<br>• சேமிக்கப்பட்ட உணவு தானியங்கள் பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மக்களுக்கு கிடைக்குமாறு செய்யப்பட்டு உணவு பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டது.<br>• பால் மற்றும் முட்டை உற்பத்தி தொடர்ந்து அதிகரித்தது.<br>**எதிர்மறை விளைவுகள் :**<br>• வசதி வாய்ப்புள்ள – வசதி வாய்ப்பில்லாத பகுதிகள் இடையே ஏற்ற தாழ்வு அதிகரித்தது.<br>• இரசாயன உரங்கள், பூச்சிக்கொல்லி மருந்துகள் சூழலியல் பிரச்சனைகளை ஏற்படுத்தின. **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 37 | **1492–இல் கொலம்பஸ் மேற்கொண்ட பயணம் :**<br>• 1492–இல் கொலம்பஸ் பாலோஸ் துறைமுகத்திலிருந்து மூன்று சிறிய கப்பல்கள் (தி சாண்டா மரியா, தி பிண்டா, தி நினா) மூலமாகப் பயணித்தார்.<br>• இரண்டு மாதங்கள் மற்றும் ஒன்பது நாட்கள் பயணம் செய்து இந்தியா என்று அவரால் நம்பப்பட்ட நிலப்பகுதியை வந்தடைந்தார்.<br>• ஆனால் உண்மையில் அது அமெரிக்கா எனும் புதிய கண்டமாகும்.<br>• தங்கம், பருத்தி, விந்தையான மிருகங்கள் மற்றும் இரண்டு இந்தியர்களுடன் ஸ்பெயின் சென்று சேர்ந்தார். **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 38 | **சூயஸ் கால்வாய் சிக்கல் :**<br>• 1956–இல் எகிப்தின் அதிபர் நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.<br>• அதுவரை அக்கால்வாய் ஆங்கிலோ–பிரெஞ்சு சூயஸ் கால்வாய் கழகம் எனும் தனியார் நிறுவனத்திற்கு சொந்தமாக இருந்தது.<br>• எனவே இஸ்ரேலியப் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தது.<br>• பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் நாடுகளின் போர் விமானங்கள் எகிப்தின் மீது குண்டுகள் வீசின.<br>• ஐ.நா. சபை எகிப்தின் மீதான படையெடுப்பை கண்டனம் செய்தது.<br>• இதனால் ஸ்ரேல் , கிரேட்பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் போரை நிறுத்தின. **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 39 | **இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகள் :**<br>• ஏறக்குறைய 6 கோடி மக்கள் இறந்தனர். லட்சக்கணக்கான மக்கள் தங்கள் வீடுகளை இழந்தார்கள்.<br>• பல பெரும் நகரங்கள் (வார்சா, கீவ், டோக்கியோ) தரைமட்டமாக்கப்பட்டது.<br>• ஐரோப்பா தன் அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது.<br>• பல நாடுகளில் பொருளாதாரம் சரிந்தது.<br>• உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்கா ஐக்கிய நாடும், சோவியத் ரஷ்யாவும் உருவாயின.<br>• பலநாடுகளில் மன்னராட்சிக்கு முடிவு கட்டப்பட்டது.<br>• காலனி நாடுகளில் சுதந்திரப் போராட்டம் தீவிரமானது.<br>• மக்களாட்சியின் மீது நம்பிக்கை ஏற்பட்டது. **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| 40 | **அணிசேரா இயக்கம் (NAM) :**<br>• இரண்டாம் உலகப் போருக்கு பின் உலகம் இரண்டு பகைக்குழுக்களாக பிரிந்தபோது, புதிதாக விடுதலை பெற்ற ஆசிய, ஆப்பிரிக்க, லத்தின் அமெரிக்க நாடுகள் அணிசேரா இயக்கத்தை உருவாக்கினர்.<br>• வல்லரசு நாடுகளுடன் கூட்டு சேராத " அணி சேராமை" என்ற கருத்தாக்கம் வலுப்பெற 1955 பாண்டுங் மாநாடு உதவியது.<br>• அணிசேரா எனும் வார்த்தையை முதன் முதலில் பயன்படுத்தியவர் வி.கே.கிருஷ்ணமேனன்.<br>• இதன் முதல் மாநாடு பெல்கிரேடில் நடைபெற்றது.<br>• அணிசேரா இயக்கம் உருவாக காரணமாக விளங்கியவர்கள்: நேரு (இந்தியா), சுகர்னோ (இந்தோனேசியா), நாசர் (எகிப்து), குவாமி நுக்குருமா (கானா) டிட்டோ (யுகோஸ்லோவியா).<br>• இதன் நோக்கம் "உலக அரசியலில் ஒரு சுதந்திரமான பாதையை உருவாக்குவதாகும்" **(ஏதேனும் மூன்று குறிப்புகள்)** | 3 |
| | பகுதி – IV | |
| | **அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்** | **7×5=35** |
| 41 அ) | **பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூக–பொருளாதாரக் காரணிகள் :**<br>• இந்தியாவின் மரபு சார்ந்த நிலவுடைமை முறையை ஆங்கிலேயர்கள் சிதைத்தனர்.<br>• வறட்சி, பஞ்சகாலங்களிலும் நிலவரி பணமாகக் கணக்கிட்டனர்.<br>• நிலங்கள் விற்பனைப் பொருளாக மாற்றப்பட்டது.<br>• வேளாண்மை வணிக மயமாக்கப்பட்டதால் உணவு உற்பத்தி குறைந்தது.<br>• சந்தைக்குத் தேவையானதை மட்டும் உற்பத்தி செய்யக் கட்டாயப் படுத்தப்பட்டனர்.<br>• நிலவரி/குத்தகை செலுத்தாமல் இருந்தால் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.<br>• ஆங்கில அரசு கட்டுப்பாடற்ற சுதந்திர வணிகக் (Laissez faire) கொள்கையைப் பின்பற்றியது.<br>• ஆங்கிலேயர்கள் பஞ்சங்களின் போது தலையிடாக் கொள்கையைப் பின்பற்றினர்.<br>• ஒப்பந்தக் கூலித் தொழிலாளர் முறையில் மக்கள் பல நாடுகளுக்கும் குடிபெயர்ந்தனர்.<br>• இந்தியாவில் தொழில்கள் நீக்கம் செய்யப்பட்டதால் மக்கள் பலர் வேலை இழந்தனர். **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 41 ஆ) | (அல்லது)<br>**லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.**<br>• நிர்வாகம் மற்றும் நிதி விஷயங்களில் மாகாணங்கள் சுதந்திரமாக செயல்பட வேண்டும்.<br>• மத்திய , மாகாண சட்ட மேலவையில் 4/5 பங்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். 1/5 பங்கு உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும்.<br>• மத்திய, மாகாண சட்டப்பேரவைகளின் 4/5 உறுப்பினர்கள் வாக்குபதிவின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.<br>• நிர்வாக சபையில் 1/2 பங்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்த இந்தியர்களாக இருக்க வேண்டும்.<br>• மாகாணத் தேர்தல்களில் முஸ்லிம்களுக்கு தனித் தொகுதிகள் வழங்க ஒப்புக்கொண்டது.<br>• இந்து மற்றும் சீக்கிய சிறுபான்மையினருக்கு சில இடங்கள் வழங்க ஒப்புப்கொண்டது.<br>• தங்கள் சபையின் தீர்மானங்களின்படி மத்திய ,மாகாண அரசுகள் செயல்பட வேண்டும்.<br>• கவர்னர் ஜெனரல் அல்லது ஆளுநர் சபை தடுப்பாணை அதிகாரம் பெறும் பட்சத்தில் ஒரு தீர்மானம் ஓராண்டுக்குள் மீண்டும் நிறைவேறினால் அது செயல்பாட்டுக்கு வரும்.<br>• ஏகாதிபத்திய அரசு அலுவல்களுடன் தொடர்புடைய எவரும் சமநிலை பெற்றிருக்க வேண்டும்.<br>• இந்து–முஸ்லிம் ஒற்றுமைக்கும் விடுதலை இயக்கத்துக்கும் லக்னோ ஒப்பந்தம் வழிவகுக்கிறது.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| 42 அ) | **இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ.சிதம்பரத்தின் பங்கு :**<br>**வ.உ.சி.யும் சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியும் :**<br>❖ ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராக சுதேசி கப்பல் கம்பெனி நிறுவினார்.<br>❖ 1906 இல் வ.உ.சி. சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியைப் பதிவு செய்தார்.<br>❖ வ.உ.சி, S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கினார்.<br>❖ சூரத் மாநாட்டில் கலந்து கொண்டார். தூத்துக்குடி கடற்கரையில் தினமும் உரையாற்றினார்.<br>**கோரல் நூற்பாலை வேலைநிறுத்தம் :**<br>❖ 1908 இல் கோரல் மில் தொழிலாளர்கள் பிரச்சனை வ.உ.சி.இன் கவனத்தை ஈர்த்தது.<br>❖ வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா இருவரும் தொழிலாளர்களிடம் உரை நிகழ்த்தினார்.<br>❖ அதில் தூண்டப்பட்ட தொழிலாளர்கள் மார்ச், 1908 இல் வேலை நிறுத்தம் செய்தனர்.<br>❖ அதை முறியடிக்க தூத்துக்குடி நகரினுள் கூட்டங்கள் நடத்த அரசு தடை விதித்தது. | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | **வ.உ.சி. மற்றும் சுப்பிரமணிய சிவா கைதும் சிறைவாசமும் :**<br>❖ 1907 இல் பிபின் சந்திரபால் விடுதலையானதை சுதேசி தினமாகக் கொண்டாடினர்.<br>❖ வ.உ.சி. சுப்பிரமணிய சிவா இருவரும் தேச துரோகக் குற்றத்துக்காக கைது செய்யப்பட்டனர்.<br>❖ சுப்பிரமணிய சிவாவுக்கு 10 ஆண்டுகள் நாடு கடத்துதல் தண்டனை விதிக்கப்பட்டது.<br>❖ வ.உ.சி. க்கு ஆயுள் தண்டனை (20 ஆண்டுகள்) விதித்து சிறையில் அடைத்தனர்.<br>❖ வ.உ.சி. அரசை எதிர்த்து பேசியதற்காக மேலும் ஒரு ஆயுள் தண்டனை விதித்தனர். **(ஒவ்வொரு தலைப்பிற்கும் இரண்டு விளக்கங்கள்)**<br><br>**(அல்லது)** | |
| 42 ஆ) | **1919–1939 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் காலனி ஆதிக்க இந்தியாவில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி :**<br>• இந்தியத் தொழில்களின் வளர்ச்சி உலக சராசரியை விடவும் சிறப்பாக இருந்தது.<br>• 1923–24க்குப் பின் நெசவுத்தொழில் மிகவும் சிறப்பாக செயல்பட ஆரம்பித்தது.<br>• தறிகள் மற்றும் சுழல் அச்சுக்களின் எண்ணிக்கை கணிசமான அளவு உயர்ந்தது.<br>• 1929–30களில் வெளியில் இருந்து பருத்தி நுகர்வு 44% ஆகும்<br>• அது 1933–34 களில் பருத்திப் பொருட்களின் இறக்குமதி 20.5% குறைந்தது.<br>• சர்க்கரை உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி ஆகிய இரண்டும் நன்கு வளர்ச்சி பெற்றது.<br>• போர்களுக்கு இடைப்பட்ட ஆண்டுகளில் கப்பல் தொழிலும் வளர்ச்சி கண்டது.<br>• 1919 ஆம் ஆண்டு சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி லிமிடெட் நிறுவப்பட்டது.<br>• 1939 இல் சிந்தியா நீராவிக் கப்பல் கம்பெனி பிரிட்டிஷாரின் பம்பாய் நீராவிக் கப்பல் நிறுவனத்தை வாங்கியது.<br>• இயந்திர உற்பத்தி, விமானம், ரயில் பெட்டி, ரயில் எஞ்சின் உற்பத்தி விரிவடைந்தது. **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்).** | 5 |
| 43 அ) | **ஆங்கிலேயரின் பிரித்தாளும் கொள்கை இந்திய தேசிய இயக்கத்தில் ஏற்படுத்திய தாக்கம் :**<br>• கூட்டு இந்திய அடையாளம் உருவாவதைத் தடுப்பதே பிரிட்டிஷாரின் நோக்கமாகும்.<br>• இந்தியர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகளை பிரிட்டிஷார் முறியடிக்கத் தொடங்கினர்.<br>• பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவில் பிரித்தாளும் கொள்கையைக் கையாண்டது.<br>• ‘‘ பிரித்தாளுதல் என்பது நமதாக வேண்டும்’’ என்று எல்பின்ஸ்டோன் எழுதியுள்ளார்.<br>• பிரிட்டிஷ் வகுப்புவாத அரசியலுக்கு சட்டபூர்வமான அங்கீகாரத்தை அளித்தது.<br>• அனைத்து கட்சிகளும் குறுகிய வகுப்புவாத அரசியல் அணுகுமுறையைப் பின்பற்றின.<br>• வட இந்தியாவில் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் இடையேயான பகைமை வளர்ந்தது. | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | • 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் பல்வேறு இந்து–முஸ்லிம் கலவரங்கள் வெடித்தன.<br>• 1882 ஜூலையில் தென்னிந்தியாவின் சேலத்தில் ஒரு பெருங்கலகம் நடைபெற்றது.<br>• இந்து தேசியம், இஸ்லாம் தேசியம் என்று கருத்து பிரிவினைக்கு இட்டுச் சென்றது.<br>• இந்து–முஸ்லிம் ஒற்றுமை சீர்குலைந்ததால் காங்கிரஸ் தன் வலிமையை இழந்தது.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | |
| 43 | **(அல்லது)**<br>**ஆ) இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்களிப்பு :**<br>• 1919இல் கிலாபத் இயக்கத்தை ஆதரித்ததோடு அதன் மாநாடுகளிலும் பங்கேற்றார்.<br>• 1919இல் ஜாலியன் வாலாபாக் படுகொலையை காந்தியடிகள் கடுமையாக சாடினார்.<br>• 1920 ஒத்துழையாமை இயக்கத்தை இந்து–முஸ்லிம் ஆதரவோடு தொடங்கினார்.<br>• பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய பட்டங்களையும் விருதுகளையும் திரும்ப ஒப்படைத்தார்.<br>• 1922இல் சௌரி சௌரா சம்பவத்தால் ஒத்துழையாமை இயக்கத்தை திரும்பப் பெற்றார்.<br>• 1930 உப்பு மீது அரசு வரி விதித்ததை எதிர்த்து சட்டமறுப்பு இயக்கத்தை தொடங்கினார்.<br>• 1930 இல் 375 கி.மீ தூரம் தண்டி யாத்திரை சென்றார் .சட்டத்தை மீறி உப்பு எடுத்தார்<br>• 1931 இல் காந்தி – இர்வின் ஒப்பந்தத்தின்படி இந்தியர்களை சிறையில் இருந்து விடுவித்தார் .<br>• 1931இல் 2–வது வட்டமேஜை மாநாட்டில் காங்கிரஸ் சார்பாக பங்கேற்றார்<br>• வகுப்பு வாரி தொகுதி ஒதுக்கீடுகளை எதிர்த்து சாகும் வரை உண்ணாவிரதம் இருந்தார்.<br>• 1932 இல் பூனா ஒப்பந்தம் அம்பேத்கர் – காந்தியடிகள் இடையே கையெழுத்தானது.<br>• 1942இல் வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைத் தொடங்கினார் .<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| 44 (அ) | **1920 முதல் 1956 வரை இந்திய மாநிலங்கள் மறுசீரமைக்கப்பட்டதன் பல்வேறு நிலைகள் :**<br>• 1920 நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் மொழிவாரி மாகாண கோரிக்கை எழுந்தது.<br>• 1928 நேரு அறிக்கையில் மாநிலங்களை மொழிவாரி மறுசீரமைக்க கோரியது.<br>• 1945 காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் மொழிவாரி மாகாணக்கருத்து இருந்தது.<br>• 1946 இல் பட்டாபி சீத்தாராமையா முதன்முதலாக ஆந்திரா மாநில கோரிக்கையை அரசமைப்பு சபையின் முன் வைத்தார்<br>• 1948 இல் ராஜேந்திர பிரசாத் மொழிவாரி மாகாணங்கள் ஆணையத்தை அமைத்தார்.<br>• 1948 இல் ஆணையத்தின் அறிக்கை மொழிவாரி மாகாண மறுசீரமைப்பை எதிர்த்தது. | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | • மொழி வாரி மாகாணக் கோரிக்கையை ஆராய்வதற்கு ஜே.வி.பி.குழு அமைக்கப்பட்டது.<br>• 1949 இல் ஜே.வி.பி.குழு மொழிவாரி மாகாணங்கள் மறுசீரமைப்பை தள்ளிப்போட்டது.<br>• 1952 இல் பொட்டி ஸ்ரீராமுலு தனி ஆந்திரா கேட்டு உண்ணாவிரதம் இருந்து இறந்தார்.<br>• 1955இல் பசல்அலி தலைவராக மாநில மறுசீரமைப்பு ஆணையம் அறிக்கை அளித்தது,<br>• 1956 இல் மாநில மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டு பல மாநிலங்கள் உதயமானது. **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | |
| 44 (ஆ) | **(அல்லது)**<br>**இந்திய விடுதலைக்குப்பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்பநிறுவனங்கள் வளர்ச்சி:**<br>• கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது.<br>• கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக டாடா ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது.<br>• புனே தேசிய வேதியியல் ஆய்வகம் புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.<br>• அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் எனும் அமைப்பு இயந்திரங்கள், மருந்துகள், விமானங்கள் ஆகியவை குறித்த ஆய்வினை முன்னெடுக்கிறது.<br>• அணுசக்தி ஆணையமானது அணு அறிவியலின் வளர்ச்சிக்கு மையமாக திகழ்கிறது.<br>• வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் ஒருங்கிணைக்கிறது.<br>• இந்திய தொழில்நுட்ப நிறுவனங்கள் பொறியியலின் வெவ்வேறு பிரிவகளுக்கான நிறுவப்பெற்ற சிறப்பு நிறுவனங்களாகும்.<br>• முதல் IIT கரக்பூரில் நிறுவப்பெற்றது.அதனைத் தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் IIT உருவாக்கப்பட்டன.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| 45 அ) | **பிரெஞ்சுப் புரட்சிக்கான காரணங்கள் யாவை ?**<br>**விவசாயிகளின் நிலை**<br>• பிரெஞ்சு சமூகத்தில் பெரும்பகுதியாக இருந்தவர்கள் விவசாயிகளே ஆவர். அவர்கள் கொத்தடிமைகளாக இருந்தனர்.<br>• ஒரு விவசாயி தன்னுடைய வருமானத்தில் 80 விழுக்காட்டை வரியாகச் செலுத்தினர்.<br>**மூன்று எஸ்டேட்டுகள்**<br>• 1.மதகுருமார்கள், 2.நிலப்பிரபுக்கள், 3. உரிமைகளற்ற சாதாரண மக்கள்.<br>• மதகுருமார்களும், பிரபுக்களும் பலவரிகளிலிருந்து விலக்களிப்பட்டிருந்தனர்.<br>• மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவர்களே வரிவிதிப்பின் கொடுமைகளை எதிர்கொள்ள நேர்ந்தது.<br>• திருச்சபையால் வசூலிக்கப்பட்ட டைத் எனும் வரி, டெய்ல் எனும் பெயரில் செலுத்தப்பட்ட நிலவரி, காபெல் எனும் உப்பின் மீதான வரி, புகையிலையின் மீதான வரி ஆகியவை முக்கியமான வரிகளாகும். | 5 |

www.Padasalai.Net




Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| | **நிதி நிர்வாகச் சீர்கேடு**<br>• அண்டை நாடான ஆங்கிலப் பேரரசுடன் பிரான்ஸ் தொடர்ந்து போர் மேற்கொண்டதால் கருவூலத்திற்குப் பெருஞ்செலவை ஏற்படுத்தியது.<br>• வட்டிக்குக் கடன் கொடுப்போரிடமிருந்து அரசு பெற்ற கடன் தொகை அதிகமானதால், பெற்ற கடன்களுக்கு அரசு அதிகமாக வட்டி செலுத்தவேண்டியதாயிற்று.,<br>• கடன்களை அடைப்பதற்காக அரசு சாதாரண மக்களின் மீது அதிக வரிகளைச் சுமத்தியது.<br>**அறிவார்ந்த மக்களின் பங்கு**<br>• பிரெஞ்சுப் புரட்சிக்கான சமூகத்தை தயார் செய்ததில் அறிவார்ந்த மக்கள் முக்கியப் பங்கு வகித்தனர்.<br>• வால்டேர், ரூசோ ஆகியோரின் எழுத்துக்கள் புரட்சிக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தன.<br>• மாண்டெஸ்கியூ அதிகாரங்கள் அனைத்தும் ஓரிடத்தில் குவிக்கப்படுவதை எதிர்த்தார்.<br>• ரூஸோ ஆள்வோர்க்கும் ஆளப்படுவோருக்குமான உறவு ஓர் ஒப்பந்தத்தால் கட்டுப்படுத்தப்பட வேண்டுமென வாதிட்டார்.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)**<br>**(அல்லது)** | |
| 45 ஆ) | **முதல் உலகப்போர் மற்றும் இரண்டாம் உலகப் போரின் பொதுவான மற்றும் வேறுபட்ட கூறுகளை ஒப்பிட்டு எழுதுக.**<br>**ஒற்றுமைகள்**<br>• இரண்டு உலகப் போர்களிலும் ஜெர்மனி தோல்வியை சந்தித்தது.<br>• இரண்டு உலகப்போர்களிலும் மில்லியன் கணக்கான மக்கள் பலியாயினர்.<br>• உலக அமைத்திக்காக முதல் உலகப்போரின் முடிவில் பன்னாட்டு சங்கமும், இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஐ.நா. சபையும் தோற்றுவிக்கப்பட்டது.<br>• இரண்டு போர்களிலும் அமெரிக்கா சில ஆண்டுகள் கழித்தே போரில் இறங்கியது.<br>• இரண்டு போர்களின் முடிவிலும் பல நாடுகளின் பொருளாதாரம் வெகுவாக பாதிப்படைந்தது.<br>**வேற்றுமைகள்**<br>• முதல் உலகப்போரில் நேச நாடுகள் அணியிலிருந்த ஜப்பான், இத்தாலி இரண்டாம் உலகப்போரில் அச்சு நாடுகள் அணியிலிருந்து போரிட்டது.<br>• முதல் உலகப்போரின் முடிவில் தோற்றுவிக்கப்பட்ட பன்னாட்டு சங்கம் தோல்வியடைந்தது.<br>• ஆனால் இரண்டாம் உலகப்போரின் முடிவில் தோற்றுவிக்கப்ட்ட ஐ.நா.சபை இன்றளவும் வெற்றிகரமாக செயல்படுகிறது.<br>• முதல் உலகப்போரில் தோல்வியுற்ற நாடுகள் மீது கடுமையான உடன்படிக்கைகள் திணிக்கப்பட்டன. ஆனால், இரண்டாம் உலகப்போரின் முடிவில் உடன்படிக்கை ஏதும் திணிக்கப்படவில்லை.<br>• முதல் உலகப்போரின் முடிவில் உலக ஆதிக்க சக்திகளாக பிரிட்டனும், பிரான்சும் இரண்டாம் உலகப்போரின் முடிவில் அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் எழுச்சிப்பெற்றன.<br>**(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 46<br>(அ) | **"இரண்டாம் உலகப்போரின் விதைகளை வெர்செய்ல்ஸ் ஒப்பந்தமே தூவியது– காரணங்கள் :**<br>1. முதல் உலகப்போர் முடிவில் வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஜெர்மனி மீது கடுமையான விதிமுறைகள் சுமத்தப்பட்டன.<br>2. ஜெர்மனியிடம் இருந்த காலனிய நாடுகள் பறிக்கப்பட்டது. படையளவு சுருக்கப்பட்டது.<br>3. அல்சேஸ் , லொரைன் பகுதிகளை பிரான்சுக்கு விட்டுக் கொடுக்க கட்டாயப்படுத்தியது.<br>4. சார் பள்ளத்தாக்கில் பிரான்சு தற்காலிக படைகளை நிறுத்திக் கொள்ள நிர்ப்பந்தித்தது.<br>5. தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியான சைலேசியா போலந்திடம் ஒப்டைக்கப்பட்டது.<br>6. 6,600 மில்லியன் பவுண்டுகள் போர் இழப்பீட்டுத் தொகை ஜெர்மனியிடம் கோரப்பட்டது.<br>7. தங்களுக்கு அநியாயம் இழைக்கப்பட்டதாக ஜெர்மனிக்கு எண்ண அலை ஏற்பட்டது.<br>8. பின் தொடர்ச்சியாக ஜெர்மனியில் நாஜி கட்சியின் அரசியல் வெற்றிக்கு வழி வகுத்தது.<br>9. சிறு குடியரசாக மாற்றப்பட்ட ஆஸ்திரியாவை , ஜெர்மனியிடம் இருந்து பிரித்து வைத்தது.<br>10. டால்மேஷியாவை யுகோஸ்லோவியாவிடம் கொடுத்ததால் இத்தாலி பாதிப்பு அடைந்தது. **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |
| 46<br>(ஆ) | **(அல்லது)**<br>**இந்திய தேசிய இயக்கம் நடைபெற்ற கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்**<br> | 5 |



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

| | | |
|---|---|---|
| 47 அ) | **போரிஸ் யெல்ட்சினின் அரசியல் வளர்ச்சி, சோவியத் யூனியனின் வீழ்ச்சியில் அவரது பங்கு.**<br>1. 1961 இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தார்<br>2. இவர் 1968 இல் கட்சியின் முழுநேர ஊழியரானார் .<br>3. கட்சியில் பல முக்கியப் பதவிகளை வகிக்கத் தொடங்கினார்<br>4. மாஸ்கோ கட்சி அமைப்பின் ஊழல்களை களைய 1985 இல் தேர்வானார்.<br>5. 1986இல் யெல்ட்சின் பொலிட்பீரோவின் உறுப்பினராக உயர்த்தப்பட்டார் .<br>6. விரைவில் மாஸ்கோவின் மேயராக நியமிக்கப்பட்டார் .<br>7. கட்சி கூட்டங்கள் , சீர்திருத்தப் பணிகள் மெதுவாக நடைபெறுவதாக விமர்சனம் செய்தனர்.<br>8. நிர்வாகம் ஜனநாயகமாக வேண்டும் , பொருளாராம் சீர்திருத்தப்பட வேண்டும் என்றார்.<br>9. 1989 இல் சோவியத் யூனியனின் மக்கள் பிரிதிநிதிகள் சபையில் ஒரு இடத்தைப் பெற்றார் .<br>10. 1990 இல் சோவியத் பாரரளுமன்றம் ரஷ்ய குடியரசின் தலைவராகத் தேர்ந்தெடுத்தது.<br>11. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் 1991 இல் யெல்ட்சின் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் தலைவரானார். **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)**<br>**(அல்லது)** | 5 |
| 47 (ஆ) | **1900 முதல் 1950 வரை இந்திய தேசிய இயக்கம் காலக்கோடு**<br>1905– வங்கப் பிரிவினை/ சுதேசி இயக்கம்<br>1906– முஸ்லிம் லீக் தோற்றம்<br>1907– சூரத் பிளவு<br>1909– மிண்டோ மார்லி சீர்திருத்தம்<br>1911– ஆஷ் படுகொலை<br>1914– இந்து மகாசபை தோற்றம்<br>1915– இந்து மகாசபையின் முதல் மாநாடு<br>1916– தன்னாட்சி இயக்கம்/லக்னோ ஒப்பந்தம்<br>1917– சம்பரான் இயக்கம்<br>1919– ரௌலட் சட்டம் / ஜாலியன் வாலாபாக் படுகொலை<br>1920– ஒத்துழையாமை இயக்கம்<br>1921– மலபார் கலகம்<br>1922– சௌரி சௌரா நிகழ்ச்சி<br>1923– சுயராஜ்யா கட்சி<br>1927– சைமன் குழு<br>1928– நேரு அறிக்கை<br>1929– லாகூர் காங்கிரஸ்<br>1930– முதல் வட்டமேசை மாநாடு/ தண்டி யாத்திரை<br>1931– 2வது வட்டமேசை மாநாடு/ காந்தி – இர்வின் ஒப்பந்தம்<br>1932–3 வது வட்டமேசை மாநாடு/ பூனா ஒப்பந்தம்<br>1935– இந்திய அரசுச்சட்டம்<br>1940– ஆகஸ்டு கொடை / லாகூர் தீர்மானம்<br>1942– வெள்ளையனே வெளியேறு இயக்கம் / கிரிப்ஸ் தூதுக் குழு<br>1945– வேவல் திட்டம் / சிம்லா மாநாடு<br>1946– அமைச்சரவை தூதுக்குழு / இடைக்கால அரசாங்கம்<br>1947– இந்தியா விடுதலை / மவுண்ட் பேட்டன் திட்டம்<br>1948– காந்தியடிகள் மறைவு<br>1950– இந்தியா குடியரசாதல் **(ஏதேனும் ஐந்து குறிப்புகள்)** | 5 |



www.Padasalai.Net

Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com

www.Padasalai.Net



Kindly Share Your Study Materials to Our Email Id - padasalai.net@gmail..com